ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

धत्से त्वं करुणापयोधिरिति यामाख्यां त्रिलोकोज्वलां
तस्यास्स्यात् फलमेतदेव मृड यन्निर्हेतुकं पालनम् ।
मादृक्षेषु जनेष्वनन्यशरणेष्वीशाशु तां ते कृपां
कृत्वा सार्थनिजाभिधो भव न चेद्व्यर्थैव सा स्यात्तव ॥

𑌧𑌤𑍍𑌸𑍇 𑌤𑍍𑌵𑌂 𑌕𑌰𑍁𑌣𑌾𑌪𑌯𑍋𑌧𑌿𑌰𑌿𑌤𑌿 𑌯𑌾𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑍋𑌜𑍍𑌵𑌲𑌾𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌫𑌲𑌮𑍇𑌤𑌦𑍇𑌵 𑌮𑍃𑌡 𑌯𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌹𑍇𑌤𑍁𑌕𑌂 𑌪𑌾𑌲𑌨𑌮𑍍 । 𑌮𑌾𑌦𑍃𑌕𑍍𑌷𑍇𑌷𑍁 𑌜𑌨𑍇𑌷𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌶𑌰𑌣𑍇𑌷𑍍𑌵𑍀𑌶𑌾𑌶𑍁 𑌤𑌾𑌂 𑌤𑍇 𑌕𑍃𑌪𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑌾𑌰𑍍𑌥𑌨𑌿𑌜𑌾𑌭𑌿𑌧𑍋 𑌭𑌵 𑌨𑌚𑍇𑌦𑍍𑌵𑍍𑌯𑌰𑍍𑌥𑍈𑌵 𑌸𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌵 ।

ஹே மிருட! ஸகல ஜனங்களுக்கும் சுகத்தைக் கொடுக்கும் சக்திவாய்ந்த ஹே சந்திரசேகர! மூன்று உலகங்களிலும் மிகப் பிரஸித்தியாய் பிரகாசிக்கின்றதான கருணைக்கடல் என்கிற யாதொரு பெயரை நீர் வஹிக்கிறீரோ அதற்கு யாது பயன் என்றால் ஒருவிதமான ஸாதனத்தையும் எதிர்பாராமல் காரணமின்றித் தன்னையடைந்தவர்களைப் பாதுகாப்பதேயாகும். ஆகையால் வேறு யாதொரு கதியுமில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு திண்டாடும் எம்போன்ற ஜனங்களிடம் அந்த உமது கிருபையைச் செய்தால் பொருளுடன் கூடிய பெயரையுடையவராக ஆவீர். அவ்விதம் செய்யாவிட்டால் கருணைக்கடலென்கிற மிகவும் மஹிமைபெற்ற அப்பெயர் உமக்கிருப்பது பயனற்றதாக முடியும்.

ஹே பரமேசுவர கருணாநிதி என்கிற பெயர் உமக்கேற்பட்டிருக்கின்றது. அப்பெயரின் கருத்தென்னவென்றால் தம்மை அண்டினவர்களை யாதொரு ஸாதனத்தையும் எதிர்பாராமல் காரணமின்றிப் பாதுகாப்பதேயாகும். அவ்விதமில்லாமல் கர்மா உபாஸ்தி ஞானம் முதலான மோக்ஷத்தைப் பெறுவதற்குற்ற ஸாதனங்களைப் பெற்றவர்களை ரக்ஷிப்பது கருணையாலென்று சொல்லவியலாது. எம்போன்ற சிலர் ஒரு ஸாதனமில்லாதவர்களாயிருப்பதால் ஒருவரும் ரக்ஷிக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் இவ்விதம் யாதொரு அவலம்பமில்லாமல் வருந்தும் ஜனங்களைப் பரிபாலிப்பதே உமது கருணைக்கு முக்கியமான பயனாகும். ஆகையால் எங்களை ரக்ஷித்து உமது பெயரை விட்டுவிடாமல் ஸ்தாபித்துக்கொள்ளுமென்று ஒரு பக்தர் பகவானிடம் வேண்டுகிறார். சுபம்!

உபபத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

பிரபவ-௵ தை-மீ௴ உ௦வ

## டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி கொண்டுவரப்போகிற
## விவாஹ வயது மசோதா கண்டனம்.

(12-வது பக்கத்தொடர்ச்சி)

தற்காலம் இவர்களாக வெளியிலிருக்கும் காபி முதலியவைகளைப் போட்டுவதால் இவ்வளவுதான் வேணுமென்கிற நிதானம் தெரியாமல்இவர்கள் இஷ்டப்படிபலாத்காரமாகவயிறுபுடைத்துக் காட்டுகிற வரையில் போட்டுகிறபடியால் அதனுல் ரோகம் வாராமல் எப்படியிருக்கும் अजीर्ण भोजनं विषं அஜீர்ணம் ஹோஜநம் **விஷம்** ஜீர்ணமாகாமலிருக்கும்படி அதிகமாகக் கொடுக்கப்படும் ஆகாரம் விஷமாகிறது. அதாவது விஷம் சரீரத்திற்கு எவ்வளவு கெடுதியையுண்டுபண்ணுமோ அவ்வளவு கெடுதியை அளவுக்கதிகம் புசிக்கும் போஜனமும் உண்டுபண்ணுமென்று பெரியோர் கூறியிருக்கிறுர். ஆகையால் கெட்டுப்போன பால்களை வாங்கிக் காபிபோட்டு பலாத்காரமாய் தங்களிஷ்டப்படி குழந்தைகளை அமுக்கிக்கொண்டு அதிகமாகப் போட்டுவதாலேயே சொல்லவொண்ணுத வியாதிகளும் அவைகளால் சரீரத்திற்குக் பலக்குறைவும் அகாலமாணம் அதிகமாகவும் ஏற்படுகின்றதேயன்றி இதற்குக் காரணம் பால்ய விவாஹமாகமாட்டாது.

இந்தமாதிரியான பால்ய விவாஹத்தையே அனுஷ்டித்து வந்த முன்காலத்திலுள்ள ஸ்திரீகளுக்குண்டான குழந்தைகள் மாத்திரம் கஷாக்கு முஷாக்கென்று எப்படியிருந்தது. அதே பால்யவிவாஹத்தை இப்போதும் நடத்துகிறுர்களே தவிர வேறு விதமல்ல. ஒரு ஸமயம் முன்காலத்தில் 10-வயதிற்குள் ஸ்திரீகளுக்கு அவசியம் விவாஹம் செய்கிறதென்கிற நியமமும் இருந்ததாகவும் தெரிகின்றது. இக்காலத்தில் ஜனங்களுக்கேற்பட்ட ஏழ்மைத்தனத்தாலும் வாதக்ஷிணையின் ஆதிக்கத்தாலும் 12 13 14வய

தான பிறகும் சில ஸ்திரீகளுக்கு விவாஹம் நடைபெறுகின்றது. இதைப்பார்த்தால் முன்காலத்தைப் போல் அவ்வளவு நியமமாக நடைபெறவில்லையென்று தோன்றுகின்றது. பால்ய விவாஹத்தையே நடத்துகிறதென்கிற நியமத்துடன் தவறாமல்நடத்திவந்த முன்காலத்திலுண்டான குழந்தைகள் ஒருவித ரோகமின்றி நிறைந்த ஆயுளுடன் பலமுள்ளதாக இருந்திருப்பதையும் தற்காலம் அவ்வளவு நியமமில்லாமல் நடந்தாலும் உண்டாகும் குழந்தைகள் மாத்திரம் அதற்கு மாறுதலாயிருப்பதற்கு யாது காரணமென்று அறிஞர்கள் சற்று ஆலோசனை செய்தால் எம்மால் கீழ் கூறப்பட்ட காரணமின்றி இவர்கள் கூறும் காரணம் அற்பமேனும் பொருந்தாதென்று நன்கு விளங்கவில்லையா. ஆகையால் இந்தப்பயனும் இதினால் எதிர்பார்க்கமுடியாது.

முடிவில் வரதக்ஷிணை நிற்பந்தம் குறையுமென்று சொல்லப்பட்டது. அதுவும் சரியல்ல.

தற்காலம் நடக்கும் விவாஹகாலத்திற்கும் இவர் கூறும் காலத்திற்கும் 2, 3, வருஷகாலம்தான் அதிகமாக இருக்கின்றது, 8-வது வயதுமுதல் ருதுவாகிறதற்குமுன் வரையில் மூன்று வருஷத்துக்குக்குறைவில்லாமல் 4, 5 வருஷகாலம் அவகாசமிருந்தும் அந்த ஸமயங்களில் குறைவடையாத வரதக்ஷிணை பின்னும் இரண்டு வருஷம் தாமதித்தால் எப்படிக்குறையுமென்று தோன்றவில்லை. ஸ்திரீகளுக்கு விவாஹம் செய்யவேண்டுமென்கிற எண்ணமிருந்தால் எப்பொழுது செய்தாலும் இந்த நிர்பந்தம் உண்டுதான். இது விலகவேண்டுமானால் நமக்குள் ஒற்றுமை ஏற்பட்டு இனி நாம் ஒருவரும் இந்தக்குரூரமான வரதக்ஷிணையை வாங்குகிறதில்லையென்று தீர்மானம் செய்துகொண்டு அவ்விதமே கட்டுப்பாடாக விவாஹங்களை நடத்தினால் மாத்திரம் அந்த நிர்ப்பந்தம் விலகுமேயல்லாமல் பால்யவிவாகத்தை நிறுத்துவதால் குறைந்துவிடுமென்று எவரும் எதிர்பார்க்கமுடியாது.

பின்னும் முன்காலங்களில் ஸரியானகாலங்களில் மழைபெய்துமைற்றஸௌகர்யங்களும் கிரமமாக ஏற்பட்டுக்கொண்டிருந்தபடியால் தேசத்தில் சீதோஷ்ணம் ஸரியாயிருந்து ஜனங்களுக்கும் ஸௌக்கியமேற்பட்டு ஸ்திரீகளும் 15, 16 வயதானபிறகு ருதுவாகிக் கொண்டு வந்தார்கள். அதினால் அக்காலத்தில் பால்ய

விவாஹத்தால் அதிக தோஷமேற்படவில்லை இந்தக்காலத்தில்ஸரியானமழையில்லாதபடியால் அதிக உஷ்ணமேற்பட்டு அதினால்பல விதமான கஷ்டங்களையும் அடைகிறோம். இந்த உஷ்ணதிக்கத்தால் இந்தக் காலத்திய ஸ்திரீகள் 10, 11 வயதிற்குள் ருதுவாகிவிடுகிறார்கள். உடனே சாந்தி பண்ணினால் பல சங்கடங்கள் நேருகின்றன. ஆகையால் விவாஹத்தை 15-வயதிற்குமேல் செய்தால் இந்த ஆபத்துக்கள் நேராது என்றும் ஸ்ரீ ஹரிவிலாஸ்சாரதா ஸ்ரீ முத்துலக்ஷ்மி முதலியவர்கள் கூறுவதாகவும்கேழ்விப்படுகிறோம்.

இதுவும் சரியல்ல:— இவர்கள் கூறுவதை அங்கீகரித்தால் ருதுமதி விவாகம் செய்யவேண்டுமென்று ஏற்படுகின்றது; அவ்விதம் செய்வது நம் சாஸ்திரங்களுக்கு நேர் விரோதமென்றும் அதினால் பலகஷ்டங்கள் நேருமென்றும் முன் நம் ஆர்யதர்மத்தில் பன்முறை விரிவாய் எம்மால் வெளியிட்டிருப்பதை நேயர்களறிந்திருக்கலாம்.

அன்றியும் இவர்கள் சொல்லுகிறபடி 11-வயதில் ருதுவாய் 12-வயதில் சாந்திக் கல்யாணம் செய்தால் உடனே கர்ப்பம் ஏற்பட்டுவிடுகிறதென்று எப்படி நிச்சயிக்க முடியும். எத்துணையோ ஸ்திரீகள் குழந்தைகளேற்படாமலிருக்கிறார்கள். அவ்விதமேற்பட்டாலும் யாதொரு ரோகமுமில்லாமல் தாயாரும் குழந்தையும் ஸௌக்கியமாயிருக்கும். கோடிக்கணக்கான ஜனங்களைப் பார்க்கலாம்.

மேலும் காலதோஷத்தால் 10, 11 வயதில் ருதுவாகும் ஸ்திரீகள் மிகவும் குறைவாயிருக்குமேயல்லாமல் அதிகமாயிருக்குமென்று கூறவியலாது 100-க்கு 10 ஸ்திரீகள் இவ்விதமிருப்பதைக் கொண்டு அநாதிஸித்தமான வைதிக ஆசாரத்தை அடியோடு மாற்ற முன்வருவது அறிஞர்களுக்கழகா.

பின்னும் 11-வயதில் ருதுவாகும் ஒரு ஸ்திரீயை 4, 5 வருஷ காலம் வைத்திருந்தால் அதினால் எதிர் பாராதகஷ்டங்கள் பல ஏற்படுமென்புதை என் இவர்கள் கவனிக்கவில்லையோ தெரியவில்லை.

ஆகையால் இவர்கள் கூறும் காரணங்கள் யாவும் உபயோகமற்றவைகளென்று எவரும் கருதக் கூடியதே.

## டாக்டர் முத்துலெக்ஷ்மிரெட்டி விவாஹ மசோதாகண்டனம் ௨௧

இதுவரையில் டாக்டர் முத்துலக்ஷ்மி முதலானவர்களால் கொண்டு வருவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கும் மசோதாவினால் எவ்விதப் பிரயோஜனங்கள் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றனவோ அவைகளில் ஒன்றாவது கிடைக்காதென்று நன்கு நிரூபித்தாய் விட்டது. இனி அதினால் ஏற்படும் கஷ்டங்களையும் கவனிப்போம்.

1. இந்தக் கார்யம் இந்துக்களுக்காக ஏற்பட்ட தர்மசாஸ்திர விதிகளுக்கு நேர் விரோதமாகும்.

2. இந்த மசோதாப்படி ஒரு துவிஜன் விவாகத்தை நடத்துவானேயாகில் அவன் தம் ஜாதி வர்ணாச்ரமங்களுக்குற்ற வைதிக கர்மங்களை அனுஷ்டிப்பதற்கு அருகமில்லாதவனாகவும் கொடிய பாபத்திற்குள்ளாகி பரலோகத்தில் விசேஷமான நரகத்திற்கும் ஆளாகிறார்கள்.

3. ருதுமதீ விவாகத்திற்கு எவ்வித தோஷம் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றதோ, அந்த தோஷம் இதினாலும் ஏற்பட நியாயமுண்டு.

4. 11-வது வயதில் ஒரு கன்னிகை ருதுமதியாக ஆய்விட்டாளேயானால் அவளை 3,4 வருஷகாலம் வரை யாதொரு தோஷத்திற்கும் பாத்தியப்படாமல் பாதுகாப்பது மிகவும் சிரமமாகும்.

5. மிகவும் ஏழ்மைத்தனத்திலிருக்கும் ஒருவன் பிறரிடம் யாசகம் வாங்கிக் கல்யாணம் செய்யுங்கால் 10-வயது 12-வயதுள்ள இரண்டு கன்னிகைகளுக்கும் சேர்த்து விவாகத்தை நடத்தினால் அவனிருக்கும் சிரமதசைக்கு எவ்வளவோ சௌகரியமாயிருக்கும். இந்த மசோதா பாஸானால் 12-வயதிற்கோ அல்லது 14-வயதிற்கோ மேலுள்ள வயதை அடைந்த பெண்களை மாத்திரம் சேர்க்க முடியுமேயல்லாமல் மசோதாவில் குறிப்பிடும் வயதிற்குக் கீழான வயதிலிருக்கும் கன்னிகைக்குச் சேர்த்து விவாகம் நடத்தமுடியாது. இந்த நிர்ப்பந்தத்தால் எவ்வளவு ஏழை ஜனங்களுக்கு எவ்வித கஷ்டங்கள் நேருமென்பதை யாரால் கூறமுடியும்.

6. ஒருவன் அதிகவயதாகி ரோகத்தாலும் பீடிக்கப்பட்டு இனி நம் சரீரம் அதிககாலம் இருப்பதற்கு நியாயமில்லை என்று தன் அனுபவத்தாலும் வைத்தியர்கள் சொல்லாலும் நன்கறிந்து கொண்டு 10-வயதிலிருக்கும் தன் குமரிக்கு விவாகத்தைத்தானே

சீக்கிரம் செய்யவேண்டுமென்று முயற்சித்தால் அவனைச் செய்யக்கூடாதென்று இந்த மசோதாத் தடுக்கும். அந்த ஸமயத்தில் ரோகியான அப்பெண்ணின் பிதா நம் குழந்தையை நல்ல இடத்தில் நாமே இருந்து விவாகம் செய்துகொடுக்கவில்லையே. எவ்விதகஷ்டத்தை நம் குழந்தை அடையப்போகிறளோ என்கிற அதிகமான மனவருத்தத்துடன் இறப்பதைத் தவிர வேறுகதியில்லை.

பின்னும் இதினுல் பரிஹாரம் செய்ய முடியாத பெரிய ஆபத்தும் நேர நியாயமுண்டு. அஃதாவது ஒருவன் தன் பெண்ணுக்கு மசோதாவில் கூறிய ஸரியான வயது வந்துவிட்டதென்று விவாகம் நடத்த வேண்டி ஸகல காரியங்களையும் செய்து மறுநாள் முகூர்த்தம் நடக்கவேண்டிய ஸமயத்தில் அவனுக்கு விரோதியான அயல் வீட்டுக்காரனொருவன் இந்தப்பெண்ணுக்கு இன்னும் ஸரியான வயது வரவில்லை அவன் வீட்டில்வேறுகல்யாணம் நடக்கிறபடியால் செலவு லாபமாகுமென்று நினைத்து இதையும் சேர்த்து செய்கிறன். இவன் செய்வது மேலுக்கு விரோதம் என்று கவுண்மெண்டுக்கு அறிவித்தால் உடனே அந்தப் பெண்ணைப் பரிசோதிக்க வரவேண்டும் அதுவும் டாக்டர்களைக்கொண்டுதான் ஆகவேண்டும். அவர்கள் வந்தாலும் 12-வயதாக வேண்டுமென்றுல் இருந்தால் 11-வயது 6-மாதம் தான் ஆகியிருக்கிறது. 12-வயது பூர்த்தியாகவில்லை என்று ஆக்ஷேபமிருந்தால் அது ஸரி அல்லது பிசகென்று இவர்களால் எப்படிக் கண்டு பிடிக்கமுடியும். சில சரீரங்களின் அமைப்பு அதிகவயதானுலும் குறைத்துக் காட்டும். சில குறைந்த வயதுள்ளவளாயிருந்தாலும் பார்வைக்கு அதிகம் தோன்றும் அதிலும் 6-மாதத்திற்கு9மாதம் என்கிற வித்தியாஸத்தை எப்படிக் கண்டு பிடிக்கமுடியும். அந்தப் பெண்ணின் ஜனனகால ரிஜிஸ்தரை வாங்கவேண்டும். அந்தக்கணக்கை ஸமீபமாயுள்ள தாலூகா ஆபீஸில் வாங்கினுலும் அது வேறு பெண் 6-மாதம் இருந்து இறந்துபோய்விட்டது அதற்குப்பிறகு இந்தப்பெண்உண்டானதென்று விரோதிகள் பலவித ஆக்ஷேபங்களைச்செய்வதற்குண்டு பெண்களுக்குகல்யாணம்செய்யமுயற்சிக்கும் ஒரு பிதா இவ்வளவு வியவகாரங்களுக்கும் ஆளாகி கல்யாணத்திற்கு வேண்டிய கிரமமான செலவையே செய்ய சக்தியில்லா

மல் திண்டாடும்பொழுது இந்தமாதிரி அனுவசியமான சிலவும் கல்யாணச் சிலவிற்குமேல் நேர்ந்தால் அவன் சொல்லமுடியாத கஷ்டங்களுக்குள்ளாவதைத் தவிர வேறு என்ன செய்யவியலும் ஏதோ சிலவைகளை மாத்திரம் இங்கு நிரூபித்தோம். இவைபோல் புத்திமான்களால் இன்னும் பல கஷ்டங்கள் நேருமென்று நிரூபிக்க முடியும். ஆகையால் இந்த மசோதாவால் அற்பமேனும் ஸாதகமில்லாவிட்டாலும் பாதகம் நிச்சயமாய் ஏற்படும் என்பதில் சந்தேகமே இல்லை.

மேலும் உலகில் பல ஜாதிப்பிரிவுகளும் அநேக மதக்கொள்கைகளுமிருக்கின்றனவென்பதும் பிரஸித்தமே. அவைகளில் ஒவ்வொரு ஜாதியாரும் தாங்கள் நடத்திக்கொள்ளவேண்டிய விவாகம் முதலியகார்யங்களைத் தன் மதக்கொள்கைப்படிக்கும் தங்கள் முன்னோர்கள் அனுஷ்டித்து வந்த முறைப்படிக்கும் நடத்தி வருகிறார்கள். இவ்விதம் நடத்தும் விவாகம் முதலிய காரியங்களில் பற்பல வேற்றுமைகள் இருக்கலாம். அவ்விதமிருந்தாலும் அதை பிறமதஸ்தர்களும் அங்கீகரிக்கிறார்களேயல்லாமல் அதைப்பற்றியொன்றும் கூற முன்வருகிறதில்லை. இவ்விதம் நடைபெறும் விவாகங்கள் சில ஜாதிகளில் ருதுவானபிறகும் சில ஜாதிகளில் 17, 18-வயதான பிறகும் விவாகத்தை ஸ்திரீகளுக்கு நடத்திவருகிறார்கள். ருதுவாகிறதற்குள் ஸ்திரீகளுக்கு அவச்யம் விவாக கர்மாவை நடத்த வேண்டுமென்று முக்கியமாய்க் கூறும் பிராமணர்களும் இவர்கள் நடத்தும் ருதுமதி விவாகத்தையும் அவர்கள் வழக்கம் அப்படித்தான் அவர்களுக்கு அது பாதகமில்லை என்று திருப்தியாய் அங்கீகரிக்கிறார்கள். இந்தமாதிரி நடத்துகிறவர்களுக்கு டாக்டர் முத்துலக்ஷ்மி கொண்டு வருவதாகக் கருதும் இந்த மசோதாவினால் யாதொரு பாதகமுமில்லை.

பின்னே பிராமணர்களுக்கு முக்கியமாயும் மற்றும் சிலஜாதியாருக்கும் இந்த மசோதா பாஸானால் பல கஷ்டங்களும் அந்த ஜாதியையே அடியோடு கெடுப்பதற்கு இது முக்கிய காரணமாகவும் ஆய்விடும்.

அந்தந்தஜாதி வர்ணாச்ரமங்களுக்குத் தகுந்தபடி மதஸம்பந்தமான விவாகம் முதலிய கர்மாக்களை இன்னஸமயம் இன்னார் இவ்விதம் இந்தக் கர்மாவைச் செய்யவேண்டுமென்று மிகவும்கருணை

யுடன் அறிவாளிகளான மனு யாக்ஞபவல்கியர் முதலான அநேக மஹரிஷிகளால் இதற்கென்றுஎழுதப்பட்டபலஸ்மிருதிகளில்ஸ்பஷ்டமாயிருக்கும் விஷயங்களை அவர் சொல்லியிருப்பது ஸரியல்லவென்றும் வேறுவிதம் நடத்தவேண்டுமென்றும் கூறுவதற்கு இவர்கள் முன் வரலாமா? மஹரிஷிகளின் அபிப்பிராயம் ஸரியல்லவென்று சொல்வதற்கு இவர்கள் அதிகாரிகளாவார்களா? எந்த விஷயத்தில் அவர்கள் வாக்கை புறக்கணிக்கத் தங்களுக்கதிகாரம் இருக்கென்பதை என் இவர்கள் சற்றுகவனிக்கக்கூடாது? பொது ஜனங்களாலும் அரசாங்கத்தாலும் டாக்டர்முத்துலக்ஷ்மி முதலானவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மிகவும் கௌரவம் பொருந்திய மெம்பர் ஸ்தானத்தை ஜனங்களுடைய க்ஷேமத்திற்குஉலகில் நடைபெறவேண்டிய காரியங்களைக் கவனிக்கும்படி கொடுத்திருக்கிறார்களா? அல்லது ஸ்ரீ பகவனுடைய ஆக்ஞா ரூபங்களாய் விளங்கும் சுருதிஸ்மிருதிகளின் விதியைஅநுஸரித்துஅநாதிகாலமாய் அநுஷ்டானத்தில் நடைபெற்றுவரும் வைதிகமான விவாகம் முதலான காரியங்களை தமக்குத் தோன்றியபடி மாற்றி ஜனங்களுக்கு அதிகமான கஷ்டத்தைக் கொடுக்கவேண்டியா? இதற்கு முன் இந்த சட்டசபை இல்லையா? அதில் மிகவும் புத்திசாலிகளான எவ்வளவு மெம்பர்களில்லை? அந்தக் காலத்திலும் இந்த பால்ய விவாகம் நடைபெறவில்லையா? அக்காலத்திலும் இந்த பால்ய விவாகம் நடைபெற்றாலும் இதினாலுண்டாகும் தோஷங்களை நன்கு அவர்கள் அறியவில்லையா? தற்காலத்திலுள்ளவர்களுக்கு மேல் இன்னும் அதிகமாக அறியக்கூடியபுத்தி சக்தி அவர்களுக்கும் இருந்ததென்பதில்சந்தேகமேயில்லை. அப்படியிருந்தும் இந்தமாதிரிகாரியங்களிலுள்ள தத்வத்தைநன்கறியக் கூடிய சக்தி நம் புத்திக்குப் போதாது. அதில் மஹரிஷிகள்தான் சிறந்தவர்கள் அவர்கள் தம் ஞானதிருஷ்டியால் நன்கு தர்மதத்வத்தையறிந்து ஜனங்களுடைய க்ஷேமத்திற்கு யோக்கியமாக ஸ்மிருதிகளில் வியவஸ்தை செய்திருக்கிறார்கள். அதைஅவ்விதமே நாம் அநுஷ்டிக்க வேண்டியவர்களேயல்லாமல் வேறுவிதம் அதில் செய்ய நமக்கதிகாரமில்லை என்கிற நிச்சயமான எண்ணங்கொண்டு மாத்திரம் அதை ஸரியாய் பரிபாலித்து வந்தார்கள்.

இந்த அபிப்பிராயத்தைக் கொண்டுதான் மாக்ஷிமை பொருந்திய கனம் விக்டோரியா மஹாராணி அவர்களும் மதஸம்பந்த

மான விஷயங்களில் தாம் தலையிடுவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இவைகளை யொன்றையும் சற்றும் கவனியாமல் தங்களிஷ்டப்படி எல்லாம் மசோதாவைக் கொண்டுவந்து ஸநாதன தர்மத்திற்கும் அதை அனுஷ்டிப்போர்களுக்கும் அதிகமான கஷ்டத்தையுண்டுபண்ணுவதுதானு லோகக்ஷேமமான காரியம். இனியாகிலும் சட்டசபையில் மெம்பர்ஸ்தானத்தை வகிக்கும் மெம்பர்கள் தயவு செய்து மதஸம்பந்தமான காரியங்களைச் சீர்திருத்த முன்னுக்கு வாராமல் அவைகளை விட்டுவிட்டு உண்மையில்ஜனங்களுக்குக்ஷேமத்தையுண்டுபண்ணக்கூடிய காரியங்கள்எவைகளோ, எந்தக்காரியத்தை நடத்தினல் பொது ஜனங்கள் திருப்தியடைவார்களோ, எவ்விதக்காரியங்களைச் செய்யவேண்டுமென்று பொதுஜனங்களாலும் கவர்ண்மெண்டாராலும் இவர்களுக்கு சட்டசபையில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த மாதிரி காரியங்களையே கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். காருண்யமுள்ள நம் கவர்ண்மெண்டார் அவர்களும் சட்டசபை மெம்பர்களால் அடிக்கடி மதஸம்பந்தமான விஷயங்களை ஸபைக்குக் கொண்டுவந்து பொது ஜனங்களுக்கும் கவர்ண்மெண்டு அதிகாரிகளுக்கும் அதிக கஷ்டத்தைக் கொடுக்கிறபடியால் தற்காலம் வரப்போகிறதாக வெளியிட்டிருக்கும் பொதுஜனங்களுக்கு அதிலும் பிராமண ஜாதிக்கு விசேஷகஷ்டத்தையுண்டுபண்ணக்கூடியதான விவாஹவயது மசோதாவை சட்டஸபையில் நுழையாமலிருக்கும்படி செய்வதோடு, இனியும் இந்தமாதிரி மதவிஷயமான மசோதாக்களை ஒருவரும் கொண்டுவரக் கூடாதென்று ஒரு உத்திரவு பிறப்பித்தால் பொது ஜனங்களுக்கு இனி இந்தமாதிரிக் கவலைக்கு இடமில்லாமலிருக்கும். ஆகையால் அவ்விதம் செய்ய வேண்டுமென்று நமது காருண்யமுள்ளகவர்ண்மெண்டாரைநான் பன்முறை பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்வதுடன் மற்றுமுள்ள நகர கிராமவாஸிகளான ஸகல ஜனங்களும் தாமதிக்காமல் இவ்விதமே சிக்கிரம் கவர்ண்மெண்டுக்கு தெரிவித்துக்கொள்ளும்படியாகவும் கேட்டுக்கொண்டு இந்த விஷயத்தையும் முடித்துக் கொள்ளுகிறேன்.

சுபம் !

உப-பத்திராதிபர்,

---

46·

## தீக்ஷிதமஹாஜனஸமுதாய ஸபை, சிதம்பரம்.

1928-ஞ ஜனவரி-மீ 22உக்கு பிரபவ-ஞ தை-மீ 9உ பானுவாரம் பகல் 3-மணிக்கு சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர்கோவில் ஆயிரக்கால் மண்டபத்தில் விவாஹவயதுநிர்ணயமசோதா விஷயமாய்க்கூடியமீட்டிங்கில்காரியதர்சியால்பிரும்மஸ்ரீமகாமஹோபாத்யாய சிவ-தண்டபாணிஸ்வாமிதீக்ஷிதர் அவர்களை அக்ராஸனாதிபதியாக விற்றிருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டு சிற. பொற. குப்புஸ்வாமிதீக்ஷிதர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டது. பிறகு அக்ராசனாதிபதி பேசியதாவது —

சமீபகாலத்தில் சென்னை சட்டசபையிலும் டில்லி சட்டசபையிலும் கொண்டுவரப்போகிற விவாஹவயதுமசோதாவானது நமது தேசத்திலுள்ள ஆஸ்திகமஹாஜனங்கள் அனைவர்களுக்கும் வைதிகமார்க்கத்திற்கும் லௌகிகமார்க்கத்திற்கும் முற்றிலும் விருத்தமாக இருப்பதுடன் நமது தேசத்திற்கு விசேஷத்தீமையையும் உண்டாக்கக்கூடியதாகவிருப்பதால் அந்த மசோதாக்களை அங்கீகாரம் செய்யாமலிருக்கும்படி சென்னை கவர்னர் அவர்களுக்கும் இந்திய வைசிராய் அவர்களுக்கும் நாம் அனைவரும் சேர்ந்து மஹஜர்நாமா செய்துகொள்ளவேண்டியதுடன் ஆங்காங்கு ஆஸ்திகர்கள் இதில் சிரத்தை எடுத்துக்கொண்டு மஹஜர் அனுப்பும்படி பேபர்கள் மூலமாக தெரிவிக்கவேண்டியது.

ஷை மசோதாவில் உள்ள விரோதங்களாவன:— பெண்களுக்கு 10-வயதிற்குள் விவாஹம் செய்யவேண்டுமென்றும், ப்ரௌடையானபிறகு விவாஹம் செய்யக்கூடாதென்றும் மனு, யாக்ஞவல்க்ய, பராசரஸ்மிருதி முதலியவைகளில் சொல்லியிருப்பதால் 14-வயதிற்குமேல்தான் விவாஹம் செய்யவேண்டுமென்பது சாஸ்திரவிருத்தமென்பது எல்லோருக்கும் ஸ்பஷ்டமான விஷயமே.

ஆனால் இந்த மசோதாவைக்கொண்டுவருபவர்கள் சாஸ்திரங்களைவிட்டு சௌகர்யத்தை அனுசரித்தே சொல்லுவதாகத் தெரியவருவதால் அந்த சௌகர்யத்திற்கும் இது விருத்தமென்பதை எடுத்துக் காட்டுவோம். மனிதர்கள் அனைவர்களுக்கும் ஆடுமாடுகளைப்போல் தோன்றியபடி சம்பந்தம் ஏற்படக்கூடாதென்று வ்யவஸ்தையுடன் விவாஹமென்கிற கர்மம் ஏற்பட்டிருக்கிறது. அது பால்யத்தில் நடந்தால் ஸ்திரீ புருஷர்களு[illegible]டு மனம்

கட்டுப்பட்டுத் தன்னுடையதென்று அன்பும் நம்பிக்கையும் விருத்தியடையும். இல்லாவிட்டால் யுவாக்களுக்கும் யுவதிகளுக்கும் காமாதிரேகத்தால் ரஹஸ்யமாக சம்பந்தங்கள் ஏற்பட்டு விடும். காமமானது பிறகுவரும் நஷ்டத்தையும் புண்யபாபங்களையும் பாராது. அப்படி நடப்பதால் ஸ்திரீகளுக்கு கர்ப்பம் உண்டாகுமேயானல் அந்த கெர்ப்பத்தை அழிக்க யத்தனிப்பார்கள். அழிக்காவிட்டாலும் அந்தப் புருஷனை நிச்சயிக்கமுடியாமல் "பண்டமோரிடம் பழியோரிடம்" என்றபடி நிரபாதியான ஒரு புருஷன் தண்டனைக்குள்ளாவான். அப்படிச்சம்பவிக்காமல் ஸ்திரீ புருஷர்களைக் காக்க போஷகர்களால் எப்படி முடியும்? அந்தப் பெண்ணிற்குத்தான் கதியென்ன? ரஹஸ்யமான ஸம்பந்தத்தினல் சகுந்தளை அடைந்த கஷ்டங்களை நாம் சாகுந்தலத்தில் கேட்டதில்லையா? இது நிற்க, சாஸ்திரத்திற்குப் பயந்து சில ஜனங்கள்ரஹஸ்யமாக விவாஹம் செய்வார்கள். அப்படிச் செய்யாதவர்களையும் கூட அப்படிச் செய்ததாக பகையாளிகள் சொல்லி அவர்கள் பேரில் குற்றங்களைத் தொடர்ந்து கேசுகளை ஆரம்பிப்பார்கள். அதனல் அனேகசாதுக்களுக்கு கஷ்டமும் நஷ்டமும் உண்டாகும். மேலும், விவாஹவயது விஷயமான தகாறுகள் வந்து, அதனல் ஏற்படக்கூடிய வியவஹாரங்களும் அதிகப்படும். இப்படி நாம் எதிர்பாராமல் வரக்கூடிய வியவஹாரங்களைத் தீர்க்க இப்பொழுது இருப்பதைக்காட்டிலும் அதிக கோர்ட்டுகள்கூட ஏற்படுத்தவேண்டியதாகவிருக்கும்.

மேலும், இப்பொழுது புருஷர்கள் கஷ்டப்பட்டாவது ஸ்திரீகளை சுகமாகவிருக்கும்படி செய்வதும், தான் மானக்குறைவான காரியங்களைச்செய்தாவது ஸ்திரீகளை மானத்துடன் ரக்ஷிப்பதும், தான் அதிகக் கடன்பட்டாவது பெண்களை நல்ல இடம் பார்த்து விவாஹம் செய்துகொடுப்பதுமே வழக்கத்திலிருக்கிறதேதவிர, தன்னுடைய சுகத்தையும் லாபத்தையுமே கருதி பெண்களை கிரயத்திற்கு விற்கவில்லையே! இந்த பாகங்களை அந்தப்பெண்மணிகளே ஆலோசித்துப்பார்த்தால் இந்த மசோதாவைக் கொண்டுவரக்கூடியவர்களைக் கொண்டுவரவேண்டாமென்று நயந்து கேட்டுக்கொள்ளலாமே! மேலும் சாஸ்திரத்தைவிட்டுப் பேசுபவர்கள் எந்தவயதில் வேண்டுமானலும் விவாஹம்செய்துகொள்ளட்டுமே?

எந்த வயதில் வைதவ்யம் வந்தாலும் மறுவிவாஹம் செய்துகொள்ளட்டுமே. ஆகவே இந்த மசோதாவினல் அவர்களுக்கு ஆக வேண்டியதென்ன? அவர்களைத் தடுப்பார் யாருமில்லையே! சாஸ்திரங்களை உல்லங்கனம் செய்து ஸாதுக்களைக்கெடுக்கும் பாபத்திற்குமாத்திரம பாத்யப்படுவானேன்! பால்யவிவாஹம் செய்து பால்யத்தில் கர்ப்பம உண்டாகி ஜனித்த பலபேர்களை திருடசரீரர்களாகவும் இப்பொழுதும் பார்க்கிறோம். 20-வயதிற்குமேல் கர்ப்பம் தரித்து ஜனித்த அநேகம்பேர்களை துர்பலர்களாகவும் காண்கிறோம். பால்யத்திலேயே விவாஹம் ஆனபோதிலும் வெகுகாலம் வரை கர்ப்பம் தரிக்காமல் பின்பு கர்ப்பம் தரித்தவர்களையும், நாம் கண்டிக்கிறோம். இதற்கு 12-வயதுள்ள ஸ்ரீ ராமனை 8-வயதுள்ள ஸீதாதேவியானவள் விவாஹம் செய்துகொண்டு பகுகாலத்திற்கு பின்பு, குசலவர்களை கர்ப்பம் தரித்ததாக திருஷ்டாந்தத்தை நாம் அறியவில்லையா? ஆகையால் கர்ப்பம் தரிப்பதும் சிசுவிற்கு பலாபலம் உண்டாவதும் அவரவர்கள் புண்யபாபங்களை அனுசரித்தேயிருக்கிறது. இதைக்கூட நமது புருஷகாரத்தினல் மாற்ற யத்தனிப்பது பெருத்த ஸாஹஸமாகும். அப்படி பால்யத்தில் வைதவ்யம் வரவேண்டுமென்றுவது சிசுக்களுக்கும் மாதாக்களுக்கும் பலக்குறைவு ஏற்படவேண்டுமென்றுவது பாபமிருந்தால் வ்யபிசாரதோஷத்தினலாவது அது உண்டாகியே தீரும். அவர்களுக்குத் தண்டனை மாத்திரம் விதிக்கலாமே ஒழிய உண்டானதை உண்டாகாமலிருக்கச்செய்ய யாரால் முடியும்?

ஆகையாலிந்த மசோதாவில் முன் அபிமானம் வஹித்தவர்களும்கூட நாம் சங்கல்பித்தோம் என்ற அபிமானத்தை விட்டு இந்த மசோதாவை அங்கீகரிக்காமலிருக்கும்படி செய்யவேண்டுமென்றுகேட்டுக்கொள்ளுகிறோம். இந்தியர்களிடத்தில் கருணையுடைய கவர்மெண்டார் அவர்களுமிந்த மசோதாவையங்கீகரிக்காமலவசியம் விலக்கிவிடவேண்டுமென்றும் பன்முறை கேட்டுக்கொள்ளுகிறோம்.

மேற்கண்ட அக்ராசனதிபதியின் வார்த்தைகள் அங்கிருந்த ஆயிரக்கணக்கான ஆஸ்திகர்கள் அனைவராலும் ஏகமனதுடன் ஆமோதிக்கப்பட்டன. இப்படிக்கு,

தீக்ஷிதமஹாஜனசமுதாய
சபை, சிதம்பரம்.

காரியதரிசி.

इत्याह्वयो येषां तुलनापरिणामविशेषाणां तैष्षोडशभिः, तुल्यमिति शेषः। एकं कर्षं तुलाज्ञाः प्रवदन्ति। अत्र माषैरित्येवसिद्धे माषाह्वयैरित्यधिकोक्तिः माष इति धान्यविशेषभ्रमो माभूदित्येवमर्थम्। अतएव ज्ञायते यवगुञ्जे यथाप्रसिद्धे एव ग्राह्ये इति। सुवर्णकारा अपि यथा यवगुंजे साक्षात्तुलनायामुपयुंजते, न तथा माषाख्यं धान्यविशेषम्। चतुर्भिश्च कर्षैः, एकं पलं तुलाज्ञा वदन्ति। सुवर्णस्य = कनकस्य, नतु राजतादेः, यत् कर्षं = कर्षमितमानं, तत्, सुवर्णसंज्ञं = सुवर्णमिति संज्ञायस्य तत्तथा भूत तुलाज्ञा वदन्ति। "सुवर्णप्रतिमां दद्या" दित्यादिषु कर्षमित कनककृतां प्रतिमां दद्यादित्यर्थो बोध्य इत्यभिप्रायः। संज्ञाशब्दाधिक्यात् पूर्ववत्परिपाटीविच्छेदेन मानान्तरं ज्ञाप्यते ॥ ॥ ४ ॥

---

## (3) நிறுத்தலளவை.

**तुलाज्ञाः** - நிறையையறிந்தவர்கள், **दशार्थगुंजं** - ஐந்துகுன்றிமணி நிறையுடையதை, **माषं** - (ஒரு) மாஷம் (என்று), **प्रवदन्ति** - சொல்லுகிறார்கள். **षोडशभिः** - பதினாறு, **माषाह्वयैश्च** - மாஷங்கொண்டது, **कर्षं** - (ஒரு) கர்ஷம் (என்று சொல்லுகிறார்கள்). **चतुर्भिः** - நான்கு, **कर्षैश्च** - கர்ஷங்கொண்டது, **पलं** - (ஒரு) பலம் (என்று சொல்லுகிறார்கள்). **सुवर्णस्य** - தங்கத்தினுடைய, **कर्षं** - கர்ஷநிறையை, **सुवर्णसंज्ञं** - ஸுவர்ணமென்று பெயருள்ளதாக (சொல்லுகிறார்கள்.)

5 குன்றிமணி 1 மாஷம்
16 மாஷம் 1 கர்ஷம்
4 கர்ஷம் 1 பலம்

---

1-பலம் 4 கர்ஷம்
,, 64 மாஷம்
,, 320 குன்றிமணி

1-கர்ஷம் 16 மாஷம்
,, 80 குன்றிமணி

---

1-மாஷம் 5 குன்றிமணி

---

கர்ஷஸுவர்ணம் 1 ஸுவர்ணம்
,, 16 மாஷம்
,, 80 குன்றிமணி

**यवोदरैरंगुलमष्टसंख्यैर्हस्तोंगुलैष्षड्गुणितैश्चतुर्भिः ।**
**हस्तैश्चतुर्भिर्भवतीह दण्डः क्रोशस्सहस्रद्वितयेन तेषाम् ॥५॥**
**स्याद्योजनं क्रोशचतुष्टयेन तथा कराणां दशकेन वंशः ।**

अथाध्वमानपरिभाषामाह— यवोदरैरित्यादिसार्धेन— अष्टसंख्यैर्यवोदरैः = यवानां मध्यैः, तुल्यमितिशेषः, अंगुलं भवतीहशास्त्रे । अन्योन्योदर संलग्ना अष्टौ यवा यावन्मिताः स्युः, तावन्मानमेकमंगुलमितीह शास्त्रे कथ्यतइत्यर्थः । षड्भिर्गुणितैश्चतुर्भिः = चतुर्विंशतिसंख्याकैरितियावत् । अंगुलैः, तुल्यइतिशेषः । एको हस्तोभवति । चतुर्भिश्च हस्तैस्तुल्यः एको दण्ड इह भवति । तेषां = हस्तानां, सहस्रद्वितयेन तुल्य एकः क्रोशो भवति । क्रोशानां चतुष्टयेन, तुल्यमितिशेषः । एकं योजनं स्यात् । यथा हस्तचतुष्टयमित एको दण्डः, तथा कराणां दशकेन तुल्य एको वंशस्स्यात् । अत्रापि तथा शब्दात् मानान्तरमिदमिति द्योत्यते ॥

---

### (4) நீட்டலளவை.

**इह** - இந்த சாஸ்திரத்தில், **अष्टसंख्यैः** - எட்டு, **यवोदरैः** - யவதான்னியங்களின் மத்தியபாகங்கள் சேர்ந்த அளவு, **अंगुलं** - (ஒரு) அங்குலமாக **भवति** - ஆகிறது. **षड्गुणितैः** - ஆறுல் பெருக்கப்பட்ட, **चतुर्भिः** - நான்குகளான, அதாவது (24) களான, **अंगुलैः** - அங்குலங்களால், **हस्तः** - (ஒரு) முழமாக ஆகிறது. **चतुर्भिः** - நான்கு, **हस्तैः** - முழங்களால், **दण्डः** - (ஒரு) தண்டமாகிறது. **तेषां** - அந்த முழங்களுடைய, **सहस्रद्वितयेन** - இரண்டாயிரங்கொண்டதிஞல், **क्रोशः** - ஒரு குரோசமாகிறது. **क्रोशचतुष्टयेन** - நான்கு குரோசங்களால், **योजनं** - (ஒரு) யோஜனம், **स्यात्**- ஆகும். **तथा** - அப்படியே, **कराणां** - முழங்களுடைய, **दशकेन** - பத்திஞல், **वंशः** - (ஒரு) கோல் ஆகும். **विंशतिवंशसंख्यैः** - இருபது கோல்கொண்ட **चतुर्भिः** - நான்கு, **भुजैः** - வரப்புகளால், **निबद्धं** - கட்டப்பட்ட, **क्षेत्रञ्च** - நிலமானது, **निवर्तनं** - நிவர்த்தனம் என்று பெயருடையதாக ஆகும். (5, 6)

निवर्तनं विंशतिवंशसंख्यैः क्षेत्रं चतुर्भिश्च भुजैर्निबद्धम् ॥६॥

अथ कस्यचित् क्षेत्रस्य संज्ञामाहार्धेन— निवर्तनमिति— विंशत्या वंशैस्संख्यायन्ते गण्यन्ते ये तथाभूतैः = विंशतिवंशमितैरिति यावत् । चतुर्भिर्भुजैः = सेतुभिः, निबद्धं यत्क्षेत्रं, तन्निवर्तनसंज्ञं स्यात् ॥ ॥६॥

---

हस्तोन्मितैर्विस्तृतिदैर्घ्यपिण्डैर्यद्द्वादशास्रं घनहस्तसंज्ञम् ।

अथ धान्यमानपरिभाषामाह— हस्तोन्मितैरित्यादिद्वाभ्यां—हस्तोन्मितैः = एकहस्तपरिमितैः, विस्तृतिः = विस्तारश्च, दैर्घ्यञ्च, पिण्डः = औन्नत्यञ्च तैः, विशिष्टम् । एकहस्तमितविस्तारं एकहस्तमितदैर्घ्यं एकहस्तमितोच्छ्रायञ्चेत्यर्थः । द्वादश, अश्राणि = कोणा यस्य तादृशं, यत्

---

8 யவோதரம் =நெற்சுடை } 1 அங்குலம்
24 அங்குலம் 1 முழம்
4 முழம் 1 தண்டம்
2000 தண்டம் 1 குரோசம்
4 குரோசம் 1 யோஜனம்
10 முழம் 1 கோல்

---

1-யோஜனம் 4 குரோசம்
,, 8000 தண்டம்
,, 32000 முழம்
,, 768000 அங்குலம்
,, 6144000யவோதரம்

---

1-குரோசம் 2000 தண்டம்
,, 8000 முழம்
,, 192000 அங்குலம்
,, 1536000யவோதரம்

1-தண்டம் 4 முழம்.
,, 96 அங்குலம்.
,, 768 யவோதரம்.

---

1-முழம் 24 அங்குலம்
,, 192 யவோதரம்
1-அங்குலம் 8 யவோதரம்

---



**धान्यादिके यद्घनहस्तमानं शास्त्रोदिता मागधखारिका सा ॥
द्रोणस्तु कार्याः खलु षोडशांशः स्यादाढको द्रोणचतुर्थभागः ।
प्रस्थश्चतुर्थांश इहाढकस्य प्रस्थांघ्रिराद्यैः कुडबः प्रदिष्टः ॥८॥**

मानं घनहस्तसंज्ञकं, यच्च धान्यादिके मेयवस्तुविषये, घनहस्तमानं = घनहस्तपरिमाणम् । सा— विधेयप्राधान्यात् स्त्रीत्वम् । मागधखारिका मगधो = देशविशेषः, तदीयखारिकेति = तत्संज्ञिकेति । शास्त्रोदिता = एतच्छास्त्रनिरूपिता ॥ प्रसिद्धो द्रोणस्तु, तादृश्याः खारिकायाः, षोडशांशः खलु = षोडशतमो भागः किल । आद्यैः = प्राचीनैः, प्रदिष्टः = उपदिष्टः । आढकस्तु तस्य द्रोणस्य, चतुर्थभागः प्रदिष्टस्स्यात् । इह = शास्त्रे, आढकस्य, चतुर्थांशः, प्रस्थः प्रदिष्टः, प्रस्थांघ्रिः = प्रस्थस्यपादः = तुरीयांश इति यावत् । आद्यैरिह, कुडबः तत्संज्ञः प्रदिष्टः ॥७, ८॥

---

(5. நெல் அளவை.)

**हस्तोन्मितैः** - முழமளவுள்ள, **विस्तारदैर्घ्यपिण्डैः** - அகலம், நீளம், உயரம் இவைகளோடு (கூடியதும்) **द्वादशाश्रं** - பன்னிரண்டுமூலைகளுள்ளதுமான, **यत्** - எந்த அளவுள்ள பாத்திரம், **घनहस्तसंज्ञं** - கனஹஸ்தமென்ற பெயருள்ளதோ, **यत्** - எது, **धान्यादिके** - தானியம் முதலிய அளக்கவேண்டிய வஸ்துக்களில், **घनहस्तमानं** - கனஹஸ்த அளவுள்ளதோ, **सा** - அந்த பாத்திரம், **मागधखारिका** - மகததேசத்து காரிகை, (என்று) **शास्त्रोदिता** - இந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டது. **द्रोणस्तु** - துரோண (தூணி) மென்பதோவெனில், **खार्याः** - (முன்கூறப்பட்ட) காரியினுடைய, **षोडशांशः** - பதினாறிலொருபாகம், **खलु** - இது பிரஸித்தமானது, **द्रोणचतुर्थभागः** - தூணியின் நான்கிலொருபாகம், **आढकः** - மரக்கால் (என்பதாக) **स्यात्** - ஆகும். **इह** - இந்த சாஸ்திரத்தில், **आढकस्य** - மரக்காலுடைய, **चतुर्थांशः** - நான்கிலொன்று, **प्रस्थः** - படியாகவும், **प्रस्थांघ्रिः** - படியின் நான்கிலொன்று, **कुडबः** - கால்படியாகவும், **आद्यैः** - முன்னோர்களால், **प्रदिष्टः** - சொல்லப்பட்டது.

63

## ஆர்யதர்மம் அனுபந்தம்.

### தேவநாகரலிபியில் மூலத்துடனும் தமிழுரையுடனும் கூடின புஸ்தகங்கள்.

தேசாபிமானத்திற்கு மதாபிமானமும், மதாபிமானத்திற்கு தேசாபிமானமும், இவ்விரண்டிற்கும் தேசீய பாஷாபிமானமும் இன்றியமையாததென்பதைத் தாங்கள் நன்குணர்ந்தவர்களாகவே இருக்கின்றீர்கள்.

தேசாபிமான மதாபிமானங்களை உள்ளபடி ஊட்டும் பல நூற்கள் வடமொழியி லிருப்பதுபற்றி உள்ளபடி அதன்பொருளை யாவரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு வெகு பாடுபெட்டு எளிய தமிழ் நடையில் பதவுரை, கருத்துரை, விசேஷவுரைகளை எழுதி இதுவரை பல நூற்களை வெளியிட்டிருப்பதுடன் முறையே அதே வெளியீடுவேலையைத்தொடர்ச்சியாகவே செய்தும் வருகிறோம்.

ஆகவே வடமொழியிலுள்ள நூற்களின் கருத்தை யாவருமறியுமாறு வெளியிடாதிருந்து வந்ததாக ஒரு சிலரால் சிலரிடத்துக் கூறப்படும் பழிச்சொல்லுக்கு இனி இடமில்லை. இந்த சமயத்தில் நீங்கள் பின் வாங்கமாட்டீர்களென்றே நம்புகிறோம்.

### சோதிட சாஸ்திர கிரந்தங்கள்.

# பிருஹத் ஜாதகம்

### தமிழ் மொழிபெயர்ப்பு

இதையே ஹோரை என்றும், வராஹ ஹோரை என்றும் சொல்லுவர். இதற்குப் பல வியாக்யானங்களுக் கிணங்கவும், நமது சொந்தமான பல அனுபவங்களுக் கிணங்கவும் சுலபமான தமிழ் நடையில் பதவுரை, கருத்துரை, விசேஷவுரை இவைகளை எழுதி தேவநாகரலிபியில் மூலத்துடன் வெளியிட் டிருக்கிறோம். யாவராலும் மிக்க கடினம் எனக் கருதப்படும் ஆயுர்த்தாயம், தசாந்தர்த்தசை, நஷ்ட ஜாதகம் முதலிய பாகங்களுக்கு யாவர்க்கும் புரியக்கூடிய நிலையில் மிக்க விரிவாக உரை எழுதப்பட் டிருக்கின்றது. உதாஹரணமாய் பலஅனுபவ ஜாதகங்களும் கட்டங்களும் ஆங்காங்கு கொடுக்கப்பட் டிருக்கின்றன. கர்க்கர், பராசரர், சத்தியா சாரியர், யவனேசுவரர் முதலியோரின் கிரந்தங்களினின்றும், ஸாராவளியினின்றும் அந்தந்த விடத்திற்குத் தேவையான வசனங்களை எடுத்து எழுதி தமிழில் உரையுமெழுதப்பட் டிருக்கிறது. இதன் முகவுரையில் சோதிட சாஸ்திரம் நம்பத்தக்கதல்ல என்றது முதலிய வாதங்களுக்குத் தக்க சமாதானமும், வராஹமிஹிரரின் கால நிர்ணயமும் செய்யப்பட் டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தனது எதிர்கால நிலையை யறிந்து கொள்வது அவச்யமாதலால் சோதிடத்தை யப்யசிக்க விருப்பமுள்

ளோரும், பல சாஸ்திரத்திற் பழகுகின்றவர்களும் இப் புஸ்தகத்தைப் படிப்பது மிகவுமவசியம். புஸ்தகம் டிம்மி எட்டு பக்க அளவில் சுமார் 750 பக்கங்களுள்ளது. கிலிட்டு எழுத்துடன் உயர்ந்த காலிகோ பைண்டு செய்தது. கிளேஸ். ரூ. 8 ரப். ரூ. 7.

## ஜாதக சந்திரிகை தமிழ் மொழிபெயர்ப்பு.

(2) இப்புஸ்தகம் சோதிட சாஸ்திரமாகிற இரும்புப்பெட்டிக்குத் திறவுகோலாகும். இதிற் சொல்லிய முறைகள் யாவும் அனுபவத்திற்கு மிக்க ஒத்தவைகளாகும். இதனுதவியின்றி பலன் சொன்னல் அப்பலன்கள் பெரும்பாலும் அனுபவத்திற்கு ஒத்திருக்க மாட்டா. மேலும் இதில் விவாஹத்திற்குவேண்டிய 10 விதப் பொருத்தங்களைப் பார்க்கவேண்டிய முறைகள், அங்காரகதோஷ நிர்ணயம் முதலிய முக்கியமான விஷயங்களுமடங்கியிருக்கின்றன. விலை ரூ 1. 1-2-0 க்கு ஸ்டாம்பு அனுப்பியும் இதைப்பெறலாம்

(3) கோசரபல நிர்ணயம்—இதில் கோசரபலன் பார்க்கவேண்டிய முறைகள் விரிவாய் கூறப்பட்டிருக்கின்றன.

தசாபுக்திபலன்களும், கோசரபலன்களும் சிலவிடங்களில் மாறி நடப்பதற்குரிய காரணங்களும், கோசரபலன், தசாபுக்தி பலன் இவற்றை எவ்விதம் கவனித்தால் அனுபவத்தில் அது ஒத்துவரக்கூடும் என்பதும் பல திருஷ்டாந்தங்கள் வாயிலாக விரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. மேலும் உத்திரட்டாதி நக்ஷத்திரம் மீனலக்கினத்திற் பிறந்த ஜாதகனுக்கு கோசரபலன் பார்க்கும் முறையை அனுபவத்திற்கு ஒத்தவாறு விரித்துக் கூறப்பட்டிருப்பதைக்கொண்டு எந்த நக்ஷத்திர எந்த ஜாதகத்திற்கும் கோசரபலன் தெளிவாய் தெரிந்து கொள்ளக் கூடும் என்பதை நாம் அதிகம்சொல்ல வேண்டுவதில்லை. சோதிடசாஸ்திரத்திற் கொஞ்சமும் பரிசய மில்லாதவனும் கூட அவ்வப்பொழுது தனக்கு நேரும் பலன்களை இதனுதவியால் நிச்சயமாய் தெரிந்து கொள்ளக்கூடும் என்பதைக் கூசாமல் கூறலாம். பள்ளியிற்பயிலும் மாணவர்கள் கூட இதனுதவியால் அந்தந்த வருஷத்தில் மேல் வகுப்புக்கு மாற்றம், பரீக்ஷையில் தேர்ச்சி இவற்றை நன்கு தெரிந்து கொள்ளக்கூடும் என்றால் மற்றவர் விஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ? விலை அணு 12. 14 அணுவுக்கு ஸ்டாம்பு அனுப்பியும் பெறலாம்.

(4) நஷ்ட ஜாதகம்.—தேவநாகரலிபியில் மூலத்துடனும் தமிழில் விரிவான பதவுரை கருத்துரைகளுடனும் கூடியது. வராஹமிஹிரால்செய்யப்பட்டநஷ்ட ஜாதகாத்யாயத்தை யனுஸரித்தது. இதனல் ஜாதகமில்லாதவனும் தனதுஜாதகத்தைக்கணித்து கொண்டுவிடலாம். விலை அணு 4. 5 அணுவுக்கு ஸ்டாம்பு அனுப்பியும் பெறலாம்,

# உடுதசாபல நிர்ணயம்.

(5) இத்தலையங்கத்தின் கீழ் பாராசரஸம்ஹிதை, பலதீபிகை, ஸாராவளி, ஜாதகசந்திரிகை, ஸர்வார்த்தசிந்தாமணி, தமிழ்ஜாதகாலங்காரம் முதலிய புராதன சோதிட கிரந்தங்களில் உடுதசாவிஷயமாய்ச் சொல்லிய பலன்களையும், ஷை தசையைப் பரிசீலனம் செய்யவேண்டிய முறையையும் ஒருங்கே சேர்த்து வெளியிட்டிருக்கிறோம். இதில் தேவநாகரலிபியில் அந்தந்தகிரந்தங்களிலுள்ள மூலசுலோகங்களும், பல அனுபவஜாதகங்கள் உதாஹரணங்கள் இவைகளுடன் கூட எளியதமிழ்நடையில் எழுதப்பட்ட கருத்துரையும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இப்புஸ்தகத்தில் ஒவ்வொரு தசையையு மெடுத்துக்கொண்டு, புக்தி, அந்தரம், ஸூக்ஷ்மம், பிராணன் வரையுள்ள காலப் பிரிவினைகளை கட்டம்போட்டு காண்பித்து ஒவ்வொன்றிலும் நடக்கும் பலன்களும் விவரமாய் கூறப்பட்டிருக்கின்றன. ஆகவே இப்புஸ்தகமொன்று கைவசமிருக்குமானால் உடுதசாபலனைப் பற்றியறிவதற்கு வேறு புஸ்தகம் தேவையாக விருக்காதென்பதுடன், மனம்போனவாறு தசா, புக்தி, அந்தர, சூக்ஷ்ம, பிராண பலன்களைச் சொல்லும் ஏனைய சோதிட வித்வான்களையணுகி அவர் மொழி கேட்பதன் மூலம் நேரும் சிரமமும் உங்களுக்கு ஒருபொழுதும் நேராதென்பதுவும் திண்ணம். மேலும், நாம்பலவருஷகாலமாய் சோதிடத்தில்பாடுபட்டு எந்த அனுபவ முறைகளைக்கண்டு கொண்டிருக்கிறோமோ அவற்றையும் ஆங்காங்கு குறிப்பிட்டுமிருக்கிறோம். சோதிடத்தில் பரிசிரமப் படுகின்றவர்களுக்கு எந்தப் புஸ்தகமொன் றிருந்தால் மற்றபுஸ்தகங்கள் தேவையாக விராதென்பதை நமது அனுபவத்தினின்றும் கண்டு இப்புஸ்தகத்தை வெளியிட்டிருப்பதால் யாவர்க்கும் இப்புஸ்தகம் நிரம்பவும் தேவையாகவிருக்கும் என்பதில் யாதும் ஐயமில்லை. ஸ்வல்பகாபிகளே அச்சிட்டிருப்பதால் முந்துவது நலம். டிம்மி 1க்கு 8 பக்க அளவில் சுமார் 480 பக்கங்களுள்ளது. விலை கிளேஸ் ரூ. 4. ரப் ரூ. 3–8–0.

(6) நவக்கிரஹாராதனக் கிரமம். இதில் நவக்கிரஹங்களை யாராதிப்பதேன்? என்ற விஷயமாய்ப் பலவாக்ஷேப சமாதானங்களடங்கிய விரிவான உபன்னியாசமும், எந்தெந்தக் காலங்களில் ஆராதிக்க வேண்டும் என்பதும், நவக்கிரஹப் பிரதிமை, நவக்கிரஹ ஹோம குண்டம் முதலியவற்றைத் தயாரிக்கவேண்டிய முறையும், ஆராதனத்திற்கு வேண்டிய மந்திரங்கள் தமிழுரையுடனு மடங்கி இருக்கின்றன. அத்துடன் நவக்கிரஹ மந்திரம், நவக்கிரஹ ஸ்தோத்திரம், நவக்கிரஹ கவசம், நவக்கிரஹ அஷ்டோத்தரம், விஷ்ணு கவசம், ஆதித்யஹிருதயம் இவைகள் பாராயணத்திற்கு உபயோகப்படுமாறு நாகரலிபியில்தனியே பிழையின்றி அச்சிடப்பட்டிருக்கின்றன. விலை கிளேஸ். ரூ. 1-4-0 ரப் 1-0-0

## வைதிக க்ரந்தங்கள்.

# த்ரிவேதி ஸந்த்யாவந்தனம்.

(7) இந்த இரண்டாவது பதிப்பில் ருக், யஜுஸ், ஸாமவேதிகளின் ஸந்தியாமந்திரங்கள் யாவும், தேவநாகரம், கிரந்தம், தமிழ் ஆகிய மூன்று எழுத்துக்களிலும் அச்சடிக்கப்பட்டிருப்பதுடன் தமிழில் பதவுரை எழுதும்பொழுதும் அதே மூன்று எழுத்துக்களிலும் மந்திரபதங்கள் அச்சடிக்கப் பட்டிருக்கின்றன.

உதாஹரணமாய்—(மூலம்) आयातु वरदादेवी (ஆயாது வரதாதேவீ ஆயாது வரதாதேவீ) (பதவுரை) वरदा (வரதா வரதா)= வேண்டிய வரனைத்தருகின்ற देवी (தேவீ தேவீ)=தேவியானவள் आयातु (ஆயாது ஆயாது)=என்னை யனுக்கிரஹிக்கவேண்டி வரட்டும். என்ற மாதிரியாய் எல்லா மந்திரங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தப்பதிப்பானது ஸந்தியா மந்திரார்த்தங்களை அறிந்து கொள்ள ஆவலுள்ள எவர்க்கும் மிக்க மிக்க உபயோகமான தென்பதில் யாதும் ஆக்ஷேபமில்லை. மேலும், பிராணயாமத்தைப்பற்றியும், காயத்திரீ மந்திரார்த்தத்தைப் பற்றியும், அர்க்கியம் விடுதலைப்பற்றியும், ஆஸனக்கிரமத்தைப் பற்றியும், காலையில் ஜபிக்கவேண்டிய (ப்ராத: ஸ்மரணீயம்) தைப் பற்றியும் மற்றும் பல விஷயங்களைப்பற்றியும், பலவாசங்கா ஸமாதானங்களுடன் இப்புஸ்தகத்திலெழுதியிருப்பதுபோல் வேறு எந்தப்புஸ்தகத்திலும் இதுகாறும் வெளிவந்ததில்லையென்று நாம் சொல்லுவது மிகையாகா. மேலும், இப்பதிப்பில் தனியாய் மூன்றுவேதிகளின் ஸந்தியாமந்திரங்கள்யாவையும் தேவநாகரம், கிரந்தம், தமிழ் மூன்று எழுத்திலும் அச்சிட்டிருப்பதுடன், மூன்று வேதிகளின் ஸமிதாதானம், ஔபாஸனம், பிரும்மயக்ஞம் யக்ஞோபவீத தாரண மந்திரம், பீஷ்மதர்ப்பணம் ஆகிய இவ்விஷயங்களும் தேவநாகரம், கிரந்தம் ஆகிய இரண்டெழுத்தில் மட்டும் அச்சிட்டு சேர்க்கப் பட்டிருக்கின்றன. இப்புஸ்தகம் டபிள்கிரௌன் 16 பக்க அளவில் 25 பாரங்களும், 400 பக்கங்களும் கொண்டது.

புல்காலிகோ பைண்டு செய்த கிளேஸ் காபி ரூ 3—0—0.
சாதா பைண்டு செய்த ரப் காபி ரூ. 2—4—0.

(8) ஸ்ரீ ருத்திரம்.—கிரந்த லிபியில் மூலமும், எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட பதவுரை கருத்துரை விசேஷ உரைகளுமுள்ளன. இதன் முகவுரையில் ஸ்ரீருத்திரத்தின் மாஹாத்மியமும், பரசிவத்தின் மேன்மை, ஸௌலப்யம் முதலிய குணங்களும் தக்கப் பிரமாணத்தை முன்னிட்டு வரையப்பட்டிருக்கிறன.

கிளேஸ் காபி 1-8-0. ரப் காபி 1-0-0.

(9) புருஷ சூக்தம் முதலியன.—இதில் புருஷசூக்தம் ஸ்ரீ சூக்தம், துர்க்கா சூக்தம், ஆதிசங்கர பகவத் பாதாசாரிய ஸ்வாமிகளவர்களால் செய்யப்பட்ட கனகதாராஸ்தவம் என்ற லக்ஷ்மீ ஸ்தோத்திரம் இவை எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட பதவுரை, கருத்துரை விசேஷவுரை இவைகளுடன் அடங்கி இருக்கின்றன. தேவநாகரலிபியில் மந்திரங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஸ்ரீசூக்த முகவுரையில் ஸ்ரீ சூக்த ஹோமவிதி ஸ்ரீ மந்திரம் முதலிய அருமையான விஷயங்களும், புருஷ சூக்த முகவுரையில் புருஷ சூக்த ஹோமவிதியும் சேர்க்கப் பட்டிருக்கிறது விலை 1-8-0

(10) மந்திரப்பிரச்னம்—இதில் கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தோன்னயனம், ஜாதகர்மம், நாமகரணம், அன்னப் பிராசனம் சவுளம், உபநயனம், ஸமாவர்த்தனம், சிராத்தம், அஷ்டகை, ஸர்ப்பபலி ஈசானபலி முதலிய ஸம்ஸ்காரங்களில் உபயோகிக்கப்படும் மந்திரங்களும், ஷை கர்மங்களை நிரூபிக்கின்ற ஆபஸ்தம்ப கிருஹ்யஸூத்திரங்களும், ஷை கர்மங்களைச் செய்யவேண்டிய முறைகளும் தமிழுரையுடனடங்கி இருக்கின்றன. தேவநாகரலிபியில் மூலம் அச்சிடப்பட்டிருக்கிறது. விவாஹாதி ஸம்ஸ்காரங்களி லுபயோகப்படும் மந்திரங்களின் கருத்தைத் தெரிந்துக் கொண்டால் ஷை கர்மங்களில் மிக்கசிரத்தை யுமுண்டாகுமென்பதில் யாதும் தடையில்லை. ஒவ்வொரு ஆஸ்திகனிடத்துமிப்புஸ்தகமொன்றிருப்பது மிகவுமவசியமாகும். கிளேஸ் ரூ. 3. ரப் 2–8.

(11) தைத்திரீயாரண்யகம் முதல்பிரச்னம்.—இதுவே அருணம் என்றும் சூர்யநமஸ்கார பிரச்னம் என்றும் சொல்லப்படும். இதன் ஆரம்பம் भद्रंकर्णेभिः शृणुयामदेवाः என்பது. இதில் 130 பஞ்சாசத்துக்கடங்கியிருக்கின்றன. தேவநாகரலிபியில் மூலமும், நியாய வியாகரண பாரங்கதர்· மீமாம்ஸா சிரோமணி பிரும்மஸ்ரீ பெரம்பூர் கணேச சாஸ்திரிகளால் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட பதவுரை, கருத்துரை, இவைகளுமுள்ளன. இம் மந்திரங்களைச் சொல்லி சூரிய நமஸ்காரஞ் செய்வதால் ஆரோக்ய முண்டாகுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. விலை கிளேஸ் 3-0-0. ரப் 2–0–0.

(12) யாஜுஷ ஸூர்ய நமஸ்கார மந்திரங்கள்.—பிரதி தினமும் செய்யவேண்டிய சூர்யநமஸ்கார மந்திரங்கள் தமிழில் பதவுரை, கருத்துரை விசேஷ வுரைகளுட னிதிலடங்கி இருக்கின்றன. தேவநாகரலிபியிலேயே மந்திரங்கள் போடப்பட் டிருக்கின்றன. தேவநாகரலிபியிலேயே நவக்கிரஹ நமஸ்கார மந்திரம், ஆதித்ய ஹிருதயம் இவைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை அணு 4. 5 அணுவுக்கு ஸ்டாம்பு அனுப்பியும் பெறலாம்.

(13) வள்ளிபரிணய மணிப்ரவாளசதகம் விலை அணு. 4.

## (தர்சன) சாஸ்திர க்ரந்தங்கள்.

(14) சாங்கியதத்துவ காரிகா — இதில் ஈசுவரகிருஷ்ணர் என்ற மஹானால் செய்யப்பட்ட காரிகைகளும், வாசஸ்பதி மிச்ரர் என்ற மஹானால் செய்யப்பட்ட "ஸாங்கியதத்துவ கௌமுதீ" என்ற அவற்றின் வியாக்கியானமும் தேவநாகரலிபியில் அச்சிடப்பட்டிருக்கின்றன. அத்துடன் ஒவ்வொரு சுலோகங்களுக்கும் எளிய தமிழ்நடையில் எழுதப்பட்ட பதவுரை கருத்துரைகளும் ஸாங்கிய தத்துவ கௌமுதீ என்ற வியாக்யானத்தின் கருத்தை உள்ளது உள்ளபடி வெளியிடும் தமிழ் மொழிபெயர்ப்புமடங்கி இருக்கின்றன. ஸாங்கிய சித்தாந்தத்தைத் தெரிந்து கொள்வதற்கு இதற்கு நிகரான நூல் உலகில் கிடையா என்பது திண்ணம். கிளேஸ் ரூ. 3. ரப் ரூ. 2.

## பாதஞ்ஜலயோக ஸூத்திரம்

(15) இது பதஞ்ஜலி மஹருஷியால் செய்யப்பட்டது. இதில் 4 பாதங்களுண்டு. இப்பதிப்பில் ஒவ்வொரு ஸூத்திரமும் தேவநாகரம் தமிழ் ஆகிய இரண்டு எழுத்துக்களிலும் அச்சிடப்பட்டிருப்பதுடன் பதவுரை எழுதுமிடத்தும் ஷை இரண்டு எழுத்துக்களிலும் சூத்திரபதங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. இதற்கு (1) வியாஸபாஷ்யம், (2) வாசஸ்பதி மிச்ரர் வியாக்கியானம், (3) நாகோஜிபட்டவிருத்தி, (4) பாவாகணேசீய வியாக்கியானம், (5) ராமானந்த ஸ்வாமிகள் வியாக்கியானம், (6) ஸதாசிவேந்திர ஸரஸ்வதிகள் விருத்தி, (7) போஜவிருத்தி ஆகிய 7 வியாக்கியானங்களைத்தழுவி விரிவாய் தமிழில் பதவுரை, கருத்துரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இந்தக் கிரந்தமானது, 1. ஸாங்க்யம், 2. யோகம், 3. நியாயம், 4. வைசேஷிகம், 5. பூர்வமீமாம்ஸை, 6. உத்தரமீமாம்ஸை, என்ற ஆறு தரிசனங்களுள் 2வதாகவுள்ளது. வேதாந்த சாஸ்திரங்களிலுள்ளவிஷயங்கள் இப்புஸ்தகத்தினுதவியின்றி தெளிவாய் மனத்திற்றைக்க மாட்டாவென்பது திண்ணம். மேலும்,வேதாந்தம் படித்தவர்க்கும், படிக்க ஆவலுள்ளவர்க்கும், படிக்காதவர்க்கும் இப்புஸ்தக மொழிபெயர்ப்பானது மிக்க மிக்க உபயோகமானதாகவே இருப்பதுடன் ஆஸ்திகனுகவுள்ள ஒவ்வொரு ஆரியர்கையிலு மிப்புஸ்தக மிருக்கவேண்டுவது மிக்க அவசியமானதாகவும் இருக்கிறது. ஆரிய சாஸ்திரங்களின் தத்துவம் யாவும் இப்புஸ்தகத்தைப் படித்தால்தான் நன்கு புலப்படும். இச்சமயத்தை வீணுக்கவேண்டாம். முந்துங்கள்! முந்துங்கள்!! முந்துங்கள்!!! டிம்மி 8 பக்க அளவில் சுமார் 310 பக்கங்களுள்ளது. புல் காலிகோ பைண்டு செய்த கிளேஸ்காபி 3-8-0. சாதா பைண்டு செய்த கிளேஸ்காபி 3-0-0. சாதா பைண்டு செய்த ரப் காபி 2-8-0.

(16) ஸ்ரீகோபிகாகீதம் — ராஸக்ரீடா காலத்தில் பகவானைக் காணுது அவரை நேரில் வரவழைப்பதற்காக ஸ்ரீகோபிகைகள் உள்ளம் உருகிப்பாடிய சுலோகரூபமான பாடல்கள். பதவுரை, கருத்துரைகளும் ராஸக்ரீடா ரஹஸ்யார்த்தமும் உள்ளது அ. 12.

## தேவநாகரலிபியில் மூலமட்டுள்ள புஸ்தகங்கள்.

(17) ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்—இதில் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரம், விஷ்ணுஸஹஸ்ரநாமாவளி, த்வாதசநாம பஞ்சரம், பஞ்சாயுதஸ்தோத்திரம், ஸ்ரீ தேசிகனால் ஸாதிக்கப் பட்ட—தசாவதார ஸ்தோத்திரம், பகவத்தியான ஸோபானம், ஸ்ரீ கோபாலவிம்சதி, திருவிச நல்லூர் அய்யாவாள் அவர்களால் செய்யப்பட்ட ஸ்ரீகிருஷ்ணத்வாதச மஞ்சரீ, ஸ்ரீகிருஷ்ணஷ்டோத்தர சதநாமாவளி இவைகளடங்கி யிருக்கின்றன. நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. (நாகரலிபி) விலை அணு 5.

(18) இந்திராக்ஷீ சிவகவச ஸ்தோத்திரம்—(தேவநாகரலிபியில்) அ.2.

(19) நீதிசதகம்—தேவநாகரலிபியில் மூலம் மட்டும் அணு. 2.

## எளியதமிழ் நடையிலுள்ள உபன்யாஸங்கள்.

(20) மறுபிறப்பும் லோகாந்தரமும்—பலவாக்ஷேப ஸமாதானங்களடங்கிய இனிய தமிழ் உபன்யாஸம். சரீரத்தைக் காட்டிலும், ஆத்மா ஒருவனிருக்கிறானென்பதும், அவன் லோகாந்தரம் செல்லும் முறையும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. விலை அணு. 4.

(21) சிராத்தம்.—விரிவான ஓர் தமிழ் உபன்யாஸம் மட்டும். இதில் தத்காலம் சிராத்தத்தைப் பற்றி செய்யப்படும் எல்லாவிதமான ஆசங்கைகளுக்கும் லோகானுபவத்தை யொட்டித் தக்க சமாதானங்கள்கூறப் பட்டிருக்கின்றன. விலை அணு 3.

## (உ) மூன்றுவேதிகளின் ஸந்தியாதி மந்திரங்கள்.

(22) இதில் சந்தியா மந்திரங்களும், ஔபாஸனம் முதலியவற்றின் மந்திரங்களும் முற்கூறியபடி அச்சடித்துத் தனியாய் விலைக்குக் கொடுக்கப்படுகிறது. இதில் 144 பக்கங்க ளடங்கியது. சாதா பைண்டு விலை அணு 12.

## கூடிய சீக்கிரம் வெளிவரும் புஸ்தகங்கள்.

(23) சகுன்பல நிர்ணயம்—ஸ்ரீவராஹ மிஹிராசாரியரால் செய்யப்பட்ட பிருஹத்ஸம்ஹிதையிலடங்கிய சாகுனம் என்ற அத்யாயத்தை சகுனபல நிர்ணயம் என்ற தலையங்கத்தின் கீழ் தமிழுரையுடன் வெளியிட்டுவருகிறோம். சகுனம் இன்னது, அசகுனமூலம் நேரும்பலன் இன்னது எனப் பகுத்தறிவதற்கு இப் புஸ்தகமின்றியமையாததாகும். (அச்சிலிருக்கிறது.)

(24) தைத்திரீயோபநிஷத்—ஸ்ரீ சங்கர பாஷ்யத்திற்கிணங்க அத்வைதஸம் பிரதாயானுஸாரியான அர்த்தமும், ஸ்ரீரங்கராமானுஜ பாஷ்யத்திற்கிணங்க விசிஷ்டாத்வைத ஸம்பிரதாயானுஸாரியான அர்த்தமும், ஆங்காங்கு வித்யாரண்ய ஸ்வாமிகளால் எழுதப் பட்ட விசேஷமான பொருளும், எளிய தமிழ்நடையில் எழுதப்

பட்ட பதவுரை, கருத்துரைகளுடன் வெளியிடப்படுகின்றது.
தேவநாகரலிபியில் மூலமுள்ளது. (அச்சிலிருக்கிறது.)

# ॥ स्वाराज्यसिद्धिः ॥

**सर्वतन्त्रस्वतन्त्रैः श्रीगङ्गाधरेन्द्रसरस्वतीन्द्रैः विरचिता** तैरेव विरचितया **कैवल्यकल्पद्रुमाख्यव्याख्यया** वेदान्तविभूषणशास्त्ररत्नाकरादिविरुदाञ्चितैः चेन्नपुरीस्थ-संस्कृतकलाशालाप्रधानाद्वैतवेदान्त शास्त्राध्यापकैः ब्रह्मश्रीयुत करुङ्गुळं **कृष्ण शास्त्रिभिः** विरचितया **परिमळाख्य** विषमस्थलटिप्पण्या च समेता ॥

**भोमहाशयाः!**

**अयं च ग्रन्थः कृत्स्नमद्वैतसिद्धान्तसर्वस्वं प्रसन्नसरळगंभीरमधुरैः मूलश्लोकैः, तद्विवरणैश्च करतलामलकवत्प्रकटीकरोतीत्ये तदनुभवसाक्षिकं वाचकमहाशयानाम्। यथायं ग्रन्थः सुस्पष्टमामूलाग्रमद्वैतसिद्धान्तं प्रकाशयति न तथान्यः प्रकरणग्रन्थ इति मुक्तकण्ठं वक्तुं पार्येत । अयं च ग्रन्थः यद्यपि काश्यां शिलालिपिभिः मुद्रित आस्ते, अथापि सुन्दराक्षरैरमुद्रणात्, अशुद्धिबहुलत्वात्, विषमस्थलटिप्पण्यभावाच्च न पठितृणां हृदयङ्गमो वर्तत इति सुन्दरैः सीसकाक्षरैः अतिधवळश्लक्ष्णायां पत्रिकायां अर्थावबोधोपयोगिचिह्नैः परिष्कृत्य इदानीमस्माभिः स्वकीयार्यमतसंवर्द्धनीमुद्राक्षरशालायां मुद्रितः। एतत्पुस्तकमेकं ग्रहीत्वा अस्मदुद्यमं सफलयेयुरत्रभवन्त इति विश्वसिमः ॥**

**निदर्शनार्थं च अनेन सह कश्चन भागः प्रेषितः॥ सचामूलाग्रमवलोकनीय इति संप्रार्थये ॥ ये च समुदायवाचक पुस्तकालयेषु अधिकृताः तेपि स्वस्वपुस्तकालयार्थमेतत्पुस्तकं ग्राहयेयुरितिच संप्रार्थये ॥**

**मूल्यम्...ग्लेस्. ४-०-०. रफ्. ३-८-०.**

வி. பி. சார்ஜ் வேறு } கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,
72 பெரிய தெருவு, திருவல்லிக்கேணி, சென்னை.